Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 046 | சனிக்கிழமை Saturday | 16.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# முன்னணி தொழில் நிறுவனங்களின் அதிகாரிகளுடன் முதலமைச்சர் விஜய் ஆலோசனை



தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கான சாத்திய கூறுங்கள் என்ன? தற்பொழுதையை தொழில் நிறுவனங்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் நிலைப்பாடுகள் என்ன என்பது குறித்து முதலமைச்சர்விஜய்தொழில்துறை அலுவலர்களுடன் விஜய் ஆலோசித்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக பன்னாட்டு ஆட்டோமொபைல் தொழில்நிறுவன தலைமை அலுவலர்களுடன் முதலமைச்சர் சி. ஜோசப் விஜய் ஆலோசனை நடத்தினார்.

குறிப்பாக, இந்த ஆலோசனைகூட்டத்தில் ஆட்டோமொபைல் நிறுவனங்களை சார்ந்த, பி. எம்.டபிள்யூ, டி.வி.ஸ்., போன்ற மோட்டார் வாகன நிறுவனங்களில் தலைமை செயல் அலுவலர்கள் முதலமைச்சரை சந்தித்தனர்.

இந்த ஆலோசனை கூட்டத்தின் வாயிலாக, ஆட்டோமொபைல் நிறுவனங்கள் மூலம் புதிய முதலீடுகளை ஈர்க்கும் வகையில் ஏற்கனவே செய்யப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் மற்றும் புதிய முதலீடுகள் ஈர்ப்பது தொடர்பாக விஜய் ஆலோசனை நடத்தினார். தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கான சாத்திய கூறுங்கள் என்ன? தற்பொழுதையை தொழில் நிறுவனங்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் நிலைப்பாடுகள் என்ன என்பது குறித்தும் தொழில் நிறுவன உயர் அலுவலர்களுடன் முதலமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தினார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்றது முதல் பல்வேறு துறை சார்ந்த ஆலோசனை கூட்டங்களை நடத்தி வருகிறார். அந்தவகையில், நேற்றைய தினம் சென்னை தலைமைச் செயலகத்தில்தமிழ்நாடு அரசின் தற்போதைய நிதிநிலை குறித்தும்,நிதி துறையின் செயல்பாடுகள் குறித்தும் தலைமைச் செயலாளர் சாய்குமார் உள்ளிட்ட நிதித்துறையை சார்ந்த உயர் அதிகாரிகளுடன் ஆலோசனையில் ஈடுபட்டார்.நேற்றைய தினம் தொழில் முதலீடு ஊக்குவிப்புமற்றும்வர்த்தகத் துறையின் செயல்பாடுகள் குறித்துதுறைசார்ந்த உயர் அதிகாரிகளுடன் ஆலோசனையில் ஈடுபட்டார்.

அந்த வகையில், இன்றைய தினம் மோட்டார் நிறுவனங்களின் தலைமை செயல் அலுவலர்களுடன் முதலமைச்சர் ஆலோசனையில் ஈடுபட்டது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. இந்த ஆலோசனைக் கூட்டத்தின் வாயிலாக, ஆட்டோமொபைல் சார்ந்த பல்வேறு புதிய முதலீடுகளை மாநிலத்தில் கொண்டு வருவதற்கு வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

முதலமைச்சர் தலைமையில் நடைபெறும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில், தமிழ்நாடு மற்றும் சர்வதேச அளவில் உள்ள தொழில் நிறுவனங்களில் முதன்மை அலுவலர்கள், தலைமைச் செயலாளர் சாய்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பதவியேற்ற உடன் அதிரடிக்கு பஞ்சமில்லாமல், பல்வேறு முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டு வரும் முதலமைச்சர் விஜய்யின் தற்போதைய இந்த கூட்டங்கள் அரசியல்வட்டாரத்தில் மிகுந்த கவனம் பெற்றுள்ளது.

# பெட்ரோல், டீசல் விலை ரூ.3 உயர்வு; அத்தியாவசிய பொருள்கள் விலை உயரும் ஆபத்து




சென்னை:கச்சாஎண்ணெய் விலை உயர்வு எதிரொலியாக நீண்ட இடைவெளிக்கு பிறகு பெட்ரோல் மற்றும் டீசல் விலைஇன்றுலிட்டருக்கு சுமார் ரூ. 3 உயர்ந்திருக்கிறது.

பெட்ரோல் மற்றும் டீசல் விலை திடீரென உயர்ந்திருக்கிறது. பெட்ரோல் மற்றும் டீசல் இரண்டுக்குமே ஏறத்தாழ 3 ரூபாய் உயர்ந்துள்ள நிலையில், சென்னையில் பெட்ரோல் விலை 2.83 அதிகரித்து ஒரு லிட்டர் ரூ. 103.67–க்கும்,டீசல்விலை ரூ. 2.86 அதிகரித்து ஒரு லிட்டர் ரூ. 95.25க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

அதேபோல், பெட்ரோல் விலையானது டெல்லியில் ரூ. 3 அதிகரித்து ரூ. 97.77க்கும், கொல்கத்தாவில் ரூ. 3.29 அதிகரித்து ரூ. 108.74க்கும், மும்பையில் ரூ. 3.14 அதிகரித்து ரூ. 106.68–க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

டீசல் விலையானது டெல்லியில் ரூ. 3 அதிகரித்து ரூ. 90.67–க்கும், கொல்கத்தாவில் ரூ. 3.11 அதிகரித்து ரூ. 95.13–க்கும், மும்பையில் ரூ. 3.11 அதிகரித்து ரூ. 93.14–க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

அமெரிக்கா – ஈரான் இடையே நிலவி வரும் போரின் காரணமாக சர்வதேச அளவில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, உலகின் 20% எண்ணெய் வர்த்தகம் நடைபெறும் ஹார்முஸ் நீரிணையில், ஈரான் பல்வேறு கட்டுப்பாடுகள் விதித்துள்ளதைஅடுத்து, கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது.

இதனால் உலக நாடுகள் கூடுதல் விலை கொடுத்து எண்ணெய் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனை கருத்தில்கொண்டு தான் பிரதமர் நரேந்திர மோடி 'வொர்க் ஃப்ரம் ஹோம்' செய்ய பழகிக்கொள்ளுமாறும், தேவையற்ற பயணங்களை தவிர்க்குமாறும் அறிவுறுத்தி இருந்தார்.

கச்சா எண்ணெய் விலை

கச்சா எண்ணெய், தொடர் விலை உயர்வைச் சந்தித்தபோதும், கடந்த 11 மாதங்களாக பெட்ரோல், டீசல் விலையில் பெரிய மாற்றங்களை மேற்கொள்ளாமல், மத்திய அரசு பொறுமை காத்தது. எனினும், எண்ணெய் நிறுவனங்களுக்குபெருமிழப்பு ஏற்படும் அபாயம் நிலவியதால்,அவர்களுக்கான சுமையை குறைக்க அரசு முடிவு செய்ததாகக் கூறப்படு கிறது. இதன் காரணமாகவே, நுகர்வோர் பயன்படுத்தும் பெட்ரோல் டீசல் விலையை அரசு உயர்த்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஏப்ரல் 2022 முதல் எரிபொருள் விலையில் பெரிய மாற்றங்கள் நிகழாமல் அரசு பார்த்துக்கொண்டது. ஆனால், மார்ச் 2024 மக்களவைத் தேர்தலுக்கு சற்று முன்னதாக பெட்ரோல், டீசல் விலை சுமார் 2 ரூபாய் வரை குறைக்கப்பட்டது.

அதற்கு அடுத்தபடியாக, (மே 15) பெட்ரோல் டீசல் விலையில் அரசு பெரிய மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளது. தற்போது உலக சந்தையில் பிரெண்ட் கச்சா எண்ணெய் 107.45டாலர்களுக்கு வர்த்தகமாகிறது. இந்திய கமாடிட்டி சந்தையில் பீப்பாய் கச்சா எண்ணெய்யின் விலை ரூ.9,738.00 ஆக உயர்ந்து காணப்படுகிறது.

இந்நிலையில், நீண்ட இடைவெளிக்கு பிறகு இன்று வெள்ளிக்கிழமை பெட்ரோல், டீசல் விலையை மத்திய அரசு அதிகரித்து, காலையிலேயே பொதுமக்களுக்கு அதிர்ச்சியை கொடுத்திருக்கிறது. இந்நிலையில், பெட்ரோல், டீசல் விலை உயர்வுக்கு காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாகஅவர்வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "மோடி அரசின் தவறுக்காக மக்கள் விலைகொடுக்கப்போகிறார்கள். ரூ.3 விலை உயர்வு அதிர்ச்சி ஏற்கனவே வந்துவிட்டது.மீதமுள்ள தொகையை தவணைகளாக வசூலிப்பார்கள்" எனதெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "இந்தியாவில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு, தற்போதைய சர்வதேச எரிபொருள் நெருக்கடியோடு, மோடி அரசாங்கத்தில் நிலவும் தலைமைத்துவ நெருக்கடியும், தொலைநோக்குச் சிந்தனையின்மையும், கரைபுரண்டு ஓடும் திறமையின்மையுமே முக்கிய காரணம் என்பதை நாட்டு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இது மோடி அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட நெருக்கடி. இதற்கான விலையை நாட்டு மக்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த விலை உயர்வு தொழில்துறைகள் முதல் குடும்பங்கள் வரை பாதிப்பை ஏற்படுத்துகிறது.

மேற்கு ஆசியப் போர் தொடங்கியபோது எல்லாம் நன்றாகவே இருக்கிறது என மத்திய அரசு நாட்டு மக்களிடம் கூறியது.காங்கிரஸ் எழுப்பிய அனைத்து கேள்விகளும் நிராகரிக்கப்பட்டன. உறுதியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. மாறாக அமெரிக்காவிடம் நாட்டின் இறையாண்மையே பிணையமாக வைக்கப்பட்டது. தேர்தலின்போது எல்லாம் இயல்பாகவே இருப்பது போல அரசு நடந்து கொண்டது. இப்போது நெருக்கடி தீவிரமடைந்து வரும் நிலையில், வீட்டில் இருந்து பணிபுரிதல், எரிபொருள் சேமிப்பு ஆகியவை குறித்து பேசத் தொடங்கி உள்ளார்.

நாங்கள் இரண்டு கேள்விகளை கேட்க விரும்புகிறோம். கடந்த மார்ச் மாதம் ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதற்கு 30 நாட்கள் விலக்கு அளிக்கப்பட்டன. அந்த விலக்கு ஆவணத்தில் அமெரிக்கா ஒப்புதல் மற்றும் அனுமதி அளித்தது போன்ற அவமானகரமான வார்த்தைகளை அரசு பயன்படுத்தி இருந்தது. அந்த விலக்குக் காலத்தை மத்திய அரசு நீட்டிக்க விரும்புவதாக தகவல் வெளியாகி உள்ளது. அப்படியானால், அனுமதி கேட்டு யாசிக்க வேண்டிய ஒரு நிலைக்கு நாட்டை மோடி கொண்டு வந்தது ஏன்?

இரண்டாவதாக, சர்வதேச கச்சா எண்ணெய் விலைகள் குறைவாக இருந்தபோது மோடி அரசாங்கம் சாமானிய மக்களுக்கு எந்தவித நிவாரணமும் அளிக்கவில்லை. மாறாக, கடந்த 10 ஆண்டுகளில் ரூ.43 லட்சம் கோடி வருவாய் ஈட்டியது. அவ்வாறு இருக்க, பணவீக்கத்தின் சுமை இப்போது ஏன் மக்கள் மீது திணிக்கப்படுகிறது?" என கேள்வி எழுப்பியுள்ளார்.

## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

| | | | |
|---|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் | |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் | |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் | |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | | |

தொடர்புக்கு : ☎ +919444082959

# ஒரே நாளில் பவுனுக்கு ரூ.2,280 சரிந்த தங்கம் விலை

சென்னை: சென்னையில் (மே.15) காலை 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.800 குறைந்த நிலையில், மாலையில் பவுனுக்கு மேலும் ரூ.1,480 குறைந்தது. அந்த வகையில் ஒரே நாளில் தங்கம் விலை பவுனுக்கு 2,280 சரிந்தது.

இந்தியா தனது தங்க நுகர்வில் கிட்டத்தட்ட முழுவதையும் இறக்குமதி மூலமாகவே பூர்த்தி செய் கிறது. இந்நிலையில் அந்நியச் செலாவணிக் கையிருப்பைப் பாதுகாக்க உதவும் வகையில், ஓராண்டுக்கு தங்கம் வாங்குவதை தவிர்க்குமாறு மக்களுக்கு பிரதமர் மோடி ஞாயிற்றுக்கிழமை அறிவுறுத்தினார்.

தங்கம், வெள்ளியின் வெளிநாட்டு கொள்முதலைக் கட்டுப்படுத்தவும் நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு மீதான அழுத்தத்தைக் குறைக்கவும் எடுக்கப்படும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, மே 12–ம் தேதியன்று தங்கம் மற்றும் வெள்ளி மீதான இறக்குமதி வரியை மத்திய அரசு 6–லிருந்து 15% ஆக உயர்த்தியது.



இதனைத் தொடர்ந்து மே 13–ம் தேதி, தங்கம் விலை பவுனுக்கு ரூ.5,360 அதிரடியாக உயர்ந்தது. அன்றைய தினமே மாலையில் குறைந்தாலும், (மே 14) மீண்டும் உயர்ந்தது.

இந்நிலையில், சென்னையில் (மே 15) 22 காரட் ஆபரணத் தங்கம் விலை கிராமுக்கு ரூ.100 குறைந்து, ஒரு கிராம் ரூ .ரூ.14,950–க்கும், பவுனுக்கு ரூ.800 குறைந்து ஒரு பவுன் ரூ.1,19,600–க்கும் விற்பனை செய்யப்பட்டது. அதன்பின், மாலையில்தங்கம்விலை கிராமுக்கு ரூ.185 குறைந்து ஒரு கிராம் ரூ.14,765–க்கும், பவுனுக்கு ரூ.1,18,120–க்கும் விற்பனையாகிறது.

வெள்ளி விலை காலையில் கிராமுக்கு ரூ.10–ம், கிலோவுக்கு ரூ.10ஆயிரமும்குறைந்து, ஒரு கிராம் ரூ.305–க்கும், ஒரு கிலோ ரூ.3 லட்சத்து 5 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்ட நிலையில், மாலையில் எந்த மாற்றமும் இன்றி விற்பனையாகிறது.

தங்கம் மற்றும் வெள்ளி மீதான இறக்குமதி வரியின் தாக்கத்தை தாண்டி, ஈரான் – அமெரிக்கா மோதல் போக்கு உள்ளிட்ட சர்வதேச காரணிகளால் தங்கம் மீதான முதலீடு குறைந்துள்ளது. இதுவும் ஆபரணத் தங்கம் விலை சரிவுக்கு காரணம். அதேவேளையில், கச்சா எண்ணெய் விலை அதிகரிப்பின் தாக்கத்தால் அமெரிக்க டாலர் மதிப்பு கூடி வருகிறது.

இதனிடையே, இன்று இந்திய ரூபாய் மதிப்பு வரலாறு காணாதவீழ்ச்சி கண்டுள்ளது. இன்றைய வர்த்தகத்தின் இடையே அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு ரூ.96 என கடும் வீழ்ச்சி கண்டதும் கவனிக்கத்தக்கது.

## செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# அமைச்சரவையில் நாடார் சமூக எம்.எல்.ஏ.க்களுக்கு அமைச்சர் பதவி வழங்க வேண்டும் என்று ச.ம.க தீர்மானம்!



தூத்துக்குடியில் நடைபெற்ற சமத்துவ மக்கள் கழகத்தின் மாவட்டச் செயற்குழு கூட்டத்தில், தமிழகத்தின் பெரும்பான்மை சமுதாயமான நாடார் சமூகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சரவையில் உரிய பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என வலியுறுத்தித்தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடியில் உள்ள மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் செயற்குழு கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் மாலைசூடி அற்புதராஜ் தலைமை தாங்கினார். மாநிலத் தொழிற்சங்கச் செயலாளர் ஜெபராஜ் டேவிட், மாநிலக் கலை இலக்கிய அணிச் செயலாளர் வழக்கறிஞர் அந்தோணி பிச்சை ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்கள்.

முதலமைச்சருக்கு வாழ்த்து: தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, பல்வேறு கட்சிகளின் ஆதரவுடன் புதிய ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள தமிழக வெற்றிக் கழகத் தலைவரும், மாண்புமிகு தமிழக முதலமைச்சருமான ஜோசப் விஜய் அவர்களுக்கு இக்கூட்டம் மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

அமைச்சரவையில் பிரதிநிதித்துவம்: தமிழகத்தில் வணிகம், விவசாயம், பனைத் தொழில் எனப் பல்வேறு துறைகளில் ஒன்றரை கோடிக்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட பெரும்பான்மை சமூகமான நாடார் சமூகத்திற்கு அமைச்சரவையில் உரிய பங்களிப்பு வழங்கப்பட வேண்டும். தவெக சார்பில் வெற்றி பெற்றுள்ள திருவைகுண்டம் எம்.எல்.ஏ சரவணன் மற்றும் நாங்குநேரி எம்.எல்.ஏ ரெட்டியார்பட்டி நாராயணன் ஆகிய இருவருக்கும் அமைச்சரவையில் வாய்ப்பளிக்க வேண்டும்.

காமராஜர் வழி ஆட்சி: பெருந்தலைவர் காமராஜர் வழியில் ஆட்சி நடப்பதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், காமராஜர் பிறந்த சமூகத்திற்கு உரிய கௌரவத்தை அளிக்க வேண்டும். கடந்த திமுக ஆட்சியில் நாடார் சமூகத்திற்கு 3 அமைச்சர்கள், சபாநாயகர் மற்றும் வாரியத் தலைவர் பதவிகள் வழங்கப்பட்டதை இக்கூட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.

பெயர் மாற்றத்திற்குப் பாராட்டு: அரசுப் போக்குவரத்துக் கழகம் என்பதை "தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்" எனப் பெயர் மாற்றம் செய்த முதலமைச்சர் மற்றும் தமிழக அரசின் முடிவிற்கு இக்கூட்டம் பாராட்டுத் தெரிவிக்கிறது.

நாடார் பேரவை மாவட்டத் தலைவர் அருண் சுரேஷ் குமார், மாவட்டப் பொருளாளர் சுப்பையா, மகளிரணித் தலைவி சந்திரா மற்றும் சமத்துவ மக்கள் கழகத்தின் பல்வேறு அணிகளின் செயலாளர்கள், நிர்வாகிகள் இக்கூட்டத்தில் பெருமளவில் கலந்து கொண்டனர்.

# மடத்தானூர் கிராமத்தில் உள்ள ஏரியில் மண் அள்ளும்போது கிடைத்த புதையலால் கிராம மக்கள் அதிர்ச்சி

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அடுத்த மடத்தானூர் கிராமத்தில்உள்ளமடத்தானூர் ஏரியில் இரவு நேரங்களில் மண் அள்ளப்பட்டிருக்கும் வேலையில், அப்போது பையில் சில பொக்கிசங்கள் கிடைத்துள்ளது. இதனையடுத்து என்ன செய்வது என அறியாமல், அதனை அருகே வீசிவிட்டு கிராம மக்களுக்கு தகவல் கொடுத்துள்ளனர். அதிகாலை முதல் இந்த செய்தி கிராமம் முழுவதும் பரவிவர ஏரியில் தங்க புதையல் கிடைத்திருப்பதாக வதந்தி சுற்று வட்டார கிராமம் முழுவதும் பரவியது. புதையலை பார்க்க கிராம மக்கள் அதிக அளவு குவியத்து வங்கினர். கிராம மக்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் அங்கு வந்த போச்சம்பள்ளி ஆர்.ஐ. குமரவேல் ஏரி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது ஏரியின் அருகே பை ஒன்றில் கோவில்களில் பயன்படுத்திய கிரீடம் உள்ளிட்ட பூஜை சாமான்கள் இருந்ததை கண்டெடுத்தார். இதனை கண்ட கிராம மக்கள் பெருத்த ஏமாற்றமடைந்தனர். இதையடுத்து ஆர்.ஐ.குமரவேல்அவர்களின் தகவலின் அடிப்படையில் அங்கு வந்த போச்சம்பள்ளி போலீசார்,ஆய்வுசெய்து அவை கோவில்களில் பயன்படுத்தும் வெண்கல பூஜை சாமான்கள் என உறுதிபடுத்தியதையடுத்து ஏமாற்றத்துடன் கூட்டத்தினர் கலைந்து சென்றனர். தங்கப்புதையல் கிடைத்திருப்பதாக கிராமம் முழுவதும் பரவிய வதந்தி போச்சம்பள்ளி பகுதியில் பேசு பொருளாக மாறியுள்ளது



# கோவை துடியலூர் அடுத்த வட்டலலையாம் பாளையம் பகுதியில் உள்ள

# ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற டெக் கார்டு லேப்ஸ் பவுன்டேஷன் நிறுவனத்தின் துவக்கவிழா நிகழ்ச்சி நடைபெற்றது



கோவை துடியலூர் அடுத்த வட்டமலையாம் பாளையம் பகுதியில் ஸ்ரீ ராமகிருஷ்ண பொறியியல் கல்லூரி செயல்பட்டு வருகின்றது. இக்கல்லூரியில் டெக் கார்டு லேப்ஸ் பவுண்டேஷன் நிறுவனத்தின் துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

தொழில் மற்றும் கல்விதுறைக்கான இணைய பாதுகாப்பு சேவைகளின் துவக்கத்தை குறிக்கும் முக்கிய நிகழ்வாக அமைந்த இம்மையம், இந்தியா மற்றும் இஸ்ரேல் நாடுகளின் தொழில்நுட்ப ஒத்துழைப்பின் அடையாளமாகஅமைந்தது.இதனை எஸ்.என்.ஆர் சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் சுந்தர் ராமகிருஷ்ணன், இணை நிர்வாக அறங்காவலர் நரேந்திரன் சவுந்தரராஜ்,அறங்காவலர்கள் ராமகிருஷ்ண விஜயகுமார், மற்றும் லட்சுமி நாராயணசாமி துரைசாமி ஆகியோர் முன்னிலையில், சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட இந்தியா பயோ பார்மாக்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சங்கர் மோகன், டெக்லேப் பவுண்டேஷன் துணை நிர்வாக இயக்குனர் டேவிட் பெலோஸ்டோஸ்கி, ஆகியோர் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தனர். தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய எஸ் என் ஆர் என் சன்ஸ் நிர்வாக அறங்காவலர் சுந்தர் கூறியதாவது..

,உலகளாவியஇணைய பாதுகாப்பின் தேவைகள், தொழில்நுட்ப மேம்பாடு, மற்றும் இந்தியா இஸ்ரேல் இடையிலான, கல்வி மற்றும் தொழில் ஒத்துழைப்பின் முக்கியத்துவம் குறித்து தெரிவித்தார். தென்னிந்திய தொழில்கள் , மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு, மேம்பட்ட சைபர் செக்யூரிட்டி தீர்வுகளை வழங்கும் நோக்கத்துடன் இந்த நிறுவனம் செயல்பட உள்ளதாகவும், பல்வேறு கல்வியாளர்கள், தொழில்துறை நிபுணர்கள், மற்றும் சிறப்பு விருந்தினர்கள், கலந்து கொண்டு இந்த மையத்தை இன்று துவக்கி வைத்துள்ளதாக தெரிவித்தார். பாதுகாப்பான டிஜிட்டல் எதிர்காலத்தை உருவாக்கும் புதிய முயற்சியின் முக்கிய நிகழ்வாக, இந்த மையம் அமையும் எனவும் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் இஸ்ரேல் பொருளாதார விவரங்களுக்கான பெங்களூருதூதரகஅதிகாரி ஒஷெரோப், எஸ்என்ஆர் அறக்கட்டளையின் தலைமை செயல் அலுவலர் சிவி ராம்குமார், தலைமை நிர்வாக அலுவலர் மகேஷ் குமார் , கல்லூரி முதல்வர்சவுந்தரராஜன், டெக் லேப் சீனியர் மேனேஜர் ஹரிஹரகோபால் , துணைத்தலைவர்கள், பேராசிரியர்கள், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நிறுவனத் தலைவர் சா.அருணன் நன்றி



தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி 2% விழுக்காடு உயர்த்தி வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நிறுவனத் தலைவர் சா.அருணன் நன்றி

ஆட்சி அமைத்த சில தினங்களிலேயே தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி 58 விழுக்காட்டில் இருந்து 60% விழுக்காடு உயர்த்தி வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ச..விஜய் ஜோசப் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்

மேலும் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்ற கோரிக்கையான அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நீண்ட நாள் கோரிக்கையானபழைய ஓய்வூதிய திட்டம் , ஐந்தாண்டிற்கு மேல் சிறப்பு கால முறை ஊதியம் , ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களை பணிந்திரம் செய்தல் , காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட அறிப்புகளும் நிறைவேற்றும் என்ற நம்பிக்கையோடு 12000 பகுதிநேர சிறப்பாசிரியர்கள் பணி நிரந்தரம்செய்யவேண்டும் , இடைநிலை ஆசிரியர்களின் சம வேலைக்கு சம ஊதியம் முரண்பாட்டை சரி செய்ய தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

# தூத்துக்குடி மாவட்டத்தில் ஜமாபந்தி ஜீன் 2ஆம் தேதி முதல் தொடக்கம்; ஆட்சியர் விஷூ மகாஜன் அறிவிப்பு!



தூத்துக்குடி மாவட்டத்தில் 1435-ஆம் ஆண்டிற்கான வருவாய் தீர்வாய கணக்குகள் முடிவு செய்யும் பணி (ஜமாபந்தி) வரும் 02.06.2026 முதல் தொடங்க உள்ளது. இது குறித்து மாவட்ட ஆட்சியர் விஷூ மகாஜன் விரிவான அட்டவணையை வெளியிட்டுள்ளார். ஒவ்வொரு தாலுகாவிலும் காலை 10.00 மணிக்கு அந்தந்த வட்டாட்சியர் அலுவலகங்களில் ஜமாபந்தி நடைபெறும். திங்கள் மற்றும் அரசு விடுமுறை நாட்கள் தவிர்த்து மற்ற நாட்களில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்படும்.

இதற்கான வருவாய் தீர்வாய அலுவலர்களை மாவட்ட ஆட்சியர் நியமித்துள்ளார். இதன்படி, ஏரல் வட்டத்திற்கு மாவட்ட ஆட்சியரும், கயத்தார் வட்டத்திற்கு மாவட்ட வருவாய் அலுவலரும் ஜூன் 2 முதல் முறையே 11 மற்றும் 12-ஆம்தேதிவரைதலைமை தாங்குகின்றனர். திருச்செந்தூர் வட்டத்திற்குத் தனி மாவட்ட வருவாய் அலுவலர் (இஸ்ரோ) மற்றும் ஓட்டப்பிடாரம் வட்டத்திற்குத் தனி மாவட்ட வருவாய் அலுவலர் (சிப்காட்) ஆகியோர் ஜமாபந்தி அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல், தூத்துக்குடி வட்டத்திற்குத் தனி மாவட்ட வருவாய்அலுவலர்(நெடுஞ்சாலைகள்) அவர்களும், விளாத்திகுளம் மற்றும் கோவில்பட்டி வட்டங்களுக்குத் தேசிய நெடுஞ்சாலைகள் பிரிவைச் சேர்ந்த தனி மாவட்ட வருவாய் அலுவலர்கள் (I மற்றும் II) ஜூன் 2 முதல் ஜூன் 9 மற்றும் 12-ஆம் தேதிகள் வரை கணக்குகளைத் தணிக்கை செய்து மனுக்களைப் பெறுகின்றனர். எட்டையாபுரம் வட்டத்திற்குச் சார் ஆட்சியரும், ஸ்ரீவைகுண்டம் மற்றும் சாத்தான்குளம் வட்டங்களுக்குமுறையே தூத்துக்குடி மற்றும் திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர்களும் தீர்வாய அலுவலர்களாகச் செயல்பட உள்ளனர்.


பொதுமக்கள் தங்களது கோரிக்கை விண்ணப்பங்களை, அந்தந்த கிராமங்களுக்குரிய வருவாய் தீர்வாயம் நடைபெறும் நாளில், வருவாய் தீர்வாய அலுவலர்களிடம் கொடுத்து பயனடையுமாறுமாவட்ட ஆட்சியர் விஷூ மகாஜன், தெரிவித்துள்ளார்.

# கடையநல்லூர் மற்றும் செங்கோட்டை

# ரெயில் நிலையங்களின் உள்கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டும்; தி.மு.ராசேந்திரன் நேரில்மனு

கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தி மு ராசேந்திரன் சென்னை தெற்கு இரயில்வே தலைமை அலுவலகத்தில், கூடுதல் பொது மேலாளரிடம், நேரில் சென்று கோரிக்கை விடுத்து ள்ளார்.

சென்னை தெற்கு இரயில்வே கூடுதல் பொது மேலாளர் திரு விபின் குமார் IRSE (Vipin kumar IRSE) அவர் நேரில் சந்தித்து கீழ்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அளித்துள்ள கடிதத்தில் கூறியிருப்ப தை நன்கு படித்து கேட்டறிந்து கூடுதல் பொது மேலாளர் மற்றும் பொதுமேலாளர் அவர்களின் செயலாளரும், துணைப்பொதுப்மேலாளருமான திரு விவேக் சர்மா ஆகியோர் இக் கோரிக்கைகளை நிறைவேற்ற ஆவன செய்வதாக உறுதி அளித்தனர்.இதுகுறித்து அவர் அளித்துள்ள மனுவில் கூறியிருப்ப தாவது கடையநல்லூர் இரயில் நிலையம்,கடையநல்லூர் நகர மக்களுக்கு மட்டுமல்லாமல், அருகிலுள்ள கிராமங்கள் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கும் சேவை செய்யும் ஒரு முக்கியமான இரயில் நிலையமாகும். ஏராளமான பயணிகள், மாணவர்கள், அலுவலகம் செல்பவர்கள், வர்த்தகர்கள்,மூத்த குடிமக்கள் மற்றும் நோயாளிகள் அன்றாடம் தங்கள் பயணத் தேவைகளுக்காக இந்த நிலையத்தைச் சார்ந்துள்ளனர்.



தற்போது, நிலையத்தில் போதிய உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் பயணிகள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.எனவே, பின்வரும் வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு இரயில்வே துறையை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

1 இரயில்கள் வரும்போது இரயில்பெட்டி எண் குறிகாட்டிகளை முறையாகக் காட்சிப்படுத்துதல்.

இரவு நேரங்களில்பயணிகளின் பாதுகாப்பிற்காக நடைமேடைகளிலும், இரயில் நிலைய வளாகத்திலும் கூடுதல் விளக்கு வசதிகள்.மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், பெண்கள் மற்றும் உடமைகளை எடுத்துச் செல்லும் பயணிகளுக்கான மின்தூக்கி வசதி. பயணிகளை வெயில் மற்றும் மழையிலிருந்து பாதுகாக்க நடைமேடைகளில் போதுமான நிழற்குடை வசதிகள். . இரயில் நிலைய வளாகத்தில் பயணிகளுக்கான வசதிகளையும் தூய்மையையும் மேம்படுத்துதல்.

கடையநல்லூர் மற்றும் அருகிலுள்ள பகுதிகளிலிருந்து தினமும் ஆயிரக்கணக்கான பயணிகள் இந்த ரயில் நிலையத்தைப் பயன்படுத்துவதால், இந்த மேம்பாடுகள் பொதுமக்களுக்குப் பெரிதும் உதவுவதோடு,பாதுகாப்பான மற்றும் வசதியான பயணத்தையும் உறுதி செய்யும். மேலும் கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி செங்கோட்டை ரயில் நிலையத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய உள்கட்டமைப்புவசதிகள்தொடர்பான கோரிக்கைகளைத் தங்களின் மேலான கொண்டு வருகிறேன்.

அதிகரித்து வரும் பயணிகள் போக்குவரத்து,, பாதுகாப்பு மற்றும் செயல்பாட்டுத் திறன் அதிகரிப்பிற்கு இந்த மேம்பாடுகள் அவசியமானவை. சாலை எண் 5-இல் நடைமேடை அமைத்தல். நடைமேடை 4 மற்றும் 5-இல் உள்ள தீவு நடைமேடைகளில் மின்தூக்கிகள் (லிஃப்ட்) நிறுவுதல். பகவதிபுரம் முனையில் சாலை 5 மற்றும் சாலை 6-ஐ இணைத்தல். கூடுதலாக இரண்டு நிறுத்துமிடங்கள் அமைத்தல். பயணிகளின் நலனுக்காகவும், இப்பகுதியில் ரயில்வே சேவைகளின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்காகவும் எனது கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலனை செய்ய யுமாறு வேண்டுகிறேன்.

16.05.2026 **தினத்தளம்** தினசரி காலை நாளிதழ் 3



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் பகுதியில் உள்ள குள்ளம்பாளையத்தில் அமைச்சர் செங்கோட்டையன் இல்லத்தில், அதிமுக முன்னாள் அமைச்சர் கே.வி. ராமலிங்கம் அவரை நேரில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். இந்த சந்திப்பின் போது, திருப்பூர் வடக்கு தமிழக வெற்றிக் கழக சட்டமன்ற உறுப்பினர் சத்தியபாமா மற்றும் நிர்வாகிகள் உடனிருந்து வாழ்த்துகளை பகிர்ந்து கொண்டனர்.



அ.தி.மு.க., தி.மு.க. இணைந்த ஆட்சி அமைக்க நூறு சதவீதம் முயற்சி செய்தார்கள்

# மக்கள் அளித்த தீர்ப்புக்கு எதிராக தீர்மானிக்க தலைவர்கள் வேண்டாம் என்பதால் தான் பின்புறம் வழியாக கள்ளக் கூட்டணி நிராகரிக்கப்பட்டது

## மதுரை விமான நிலையத்தில் அமைச்சர் சிபிஆர் நிர்மல் குமார் பேட்டி

தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி அமைந்த பிறகு அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு சி டி ஆர் நிர்மல் குமார் சென்னையில் இருந்து முதல் முறையாக மதுரை விமான நிலையம் வந்தார் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து கூறுகையில்;-

தவெகதலைவர்தலைமையிலான அரசு பொறுப்பேற்று ஆறு நாட்கள் ஆகிவிட்டது. ஒவ்வொரு நாளும் ஆக்கபூர்வ பணிகள் நடைபெற்று வருகிறது .

மதுபான கடைகள் மூட பக்கத்தில் இருந்து பெண்களுக்கான பாதுகாப்பு செய்வதிலிருந்து அனைத்தும் ஆக்கப்பூர்வமாக செய்யப்பட்டு வருகிறது. மக்கள் எதற்காகவாக்களித்தார்களோ அது 100% நிறைவேற்ற ப்படும்.

போதைப் பொருள்கள் இல்லாத தமிழகத்தை உருவாக்க முதலமைச்சர் தமிழக முழுவதும் அதிகாரிகளுக்கு உத்தரவிடுவார். பழைய திட்டங்கள் எல்லாம் தொடரும் என்று சொன்னதிலிருந்தார் அதன்படி மகளிர் உரிமைத்தகையா ஆயிரம் ரூபாய் உள்ளிட்டவை வழங்கப்பட்டு வருகிறது.

மக்கள் நலத் திட்டங்கள் மக்கள் தில பணிகள் தொடர்ந்து நடைபெறும். மதுரை மாநகராட்சி முழுவதும் கழிவுநீர் கால்வாய் தேவை என்று அடிப்படையில் விஷயம் உள்ளது.படிப்படியாகநிறைவேற்றப்படும்.

மகளிர் உரிமைத்தொகை 2500 ரூபாய் எப்போது வழங்கப்படும் பட்ஜெட் நிதிநிலை அறிக்கையில் சேர்த்த பிறகு தான் அறிவிக்க முடியும்.அதற்காக டைம் வேண்டும் என முதலமைச்சர் சொல்லி இருக்கிறார். சட்டமன்றத்தில் 144 பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர். ஆச்சி எப்போது வேண்டுமானாலும் களையலாம் என ஸ்டாலின் கூறியது ஒட்டுமொத்த மக்கள் அடித்த தீர்ப்பு யார் எதுவும் செய்ய முடியாது.

மதுரை மாநகராட்சி இதுவரைக்கும் நடந்த ஊழல்களை சீரமைக்க வேண்டும். ஊழல் இல்லாமல் தடுக்க வேண்டும் என்ற எங்களுடைய முதல்வர் எடுத்து வருகிறார்.

பூரண மதுவிலக்கு சாத்தியமா? படிப்படியாகத்தான் செயல்படுத்த முடியும் முதல் கட்டமாக 717 மதுபான கடைகள் மூடப்பட்டுள்ளது. சட்டவிரோதமாக மது விற்பனை தடுக்க வேண்டும் என முதல்வர் சொல்லியிருக்கிறார்.

கடந்த முதல்வர் ஸ்டாலின் நீட் எதிராக கடிதம் மட்டுமே எழுதுகிறார் என விஜய் விமர்சனம் செய்தார் தற்போது விஜய் கடிதம் எழுதிருக்கிறார் என்ற கேள்விக்கு? நீட் தேர்வு மத்திய அரசு கட்டுப்பாட்டில் உள்ளது. ஒருதேர்வை கூட ஒழுங்காக நடத்த முடியாத நிலையில் உள்ளது. மாணவர்கள் மன உளைச்சலில் உள்ளனர்.

நீட் தேர்வு மிகப்பெரிய வியாபாரமாக மாறி உள்ளது. ஏழை எளிய மக்களுக்கு எட்டாத கனியாக உள்ளது. நீட் வேணாம் என்பது தான் எங்களுடைய நோக்கம். உச்ச நீதிமன்றமும் வானில் உள்ளது.

லட்சக்கணக்கான மாணவர்கள் மன உளைச்சலில் உள்ளனர். நீட் ரேங்கில் மிகப்பெரிய குளறுபடிகள் உள்ளது. நீட்டல் எந்த பயனும் இல்லை.

மதுபான கடைகள் நேரம் குறைக்கப்படுமா முதல்வர் தான் முடிவு செய்வார்.

அதிமுக உட்கட்சி பிரச்சனை. எடப்பாடி அவர்களும் ஸ்டாலின் அவர்களும் வார பத்திரிக்கையில் வந்தது திமுக மதிமுக இணைந்து ஆட்சி அமைக்க முயற்சி செய்ததாககூறியிருந்தது அதற்கு எதிர்ப்பு தெரிவித்து பெரும்பான்மையான எம்எல்ஏக்கள் வெளியே வந்து மக்கள் தீர்ப்புக்கு ஆதரவளிக்கிறோம் என கூறி இருக்கிறார்கள்.

உதயநிதி மற்றும் ஸ்டாலின் எடப்பாடி ஆகியோர் சேருது புற வழியாகஆட்சி அமைக்க முயற்சி செய்தனர். என அந்த கட்சியில் இருக்க எல்லோரும் சொன்னார்கள்.

திமுக அதிமுக இருவரும் இணைந்து ஆட்சி அமைக்க 100 சதவீதம் முயற்சி செய்தனர் அது அவர்கள் கூட்டணி கட்சியினர் மூலமாக தகவல் தெரிந்து கொண்டோம். ரகசியமாக சந்திப்பு நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டது. அதிமுக திமுக இணைந்த ஆட்சி அமைக்க நூறு சதவீதம் முயற்சி செய்தார்கள், மக்கள் அளித்ததீர்ப்புக்கு எதிராக திருமணமான தலைவர்கள் வேண்டாம் என்பதால்தான் பின்புறம் வழியாக கள்ளக் கூட்டணிநிராகரிக்கப்பட்டது. முதல்வர் விஜய் எடப்பாடி பழனிச்சாமியை சந்திக்கவில்லை. ஒரு சில பேரை ஒரு சில நேரத்தில் சந்தித்தால் சரியாக இருக்காது மக்களுக்கும் எதிராக இருக்கும் சூழ்நிலைக்கும் எதிராக இருக்கும். சரியாக இருக்காது என்பதனால் தான் சந்திக்கவில்லை.

# கோவை சிவாஜி காலனி பகுதியில், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக கலப்பு திருமண நிகழ்ச்சி நடைபெற்றது

## இந்து முறைப்படி திருமணம் நடைபெற்றது




கோவை சிவாஜி காலனி பகுதியில், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் கோவை மண்டலஅலுவலகம்அமைந்துள்ளது. இக்கட்சியின் மாநில துணை தலைவராக வழக்கறிஞர் புஸ்பாணந்தம் இருந்து வருகின்றார். இவரது தலைமையில் இன்று கலப்பு திருமணம் நடைபெற்றது. கோவை மாவட்டம் அன்னூரை சேர்ந்தவர் நிர்மல் குமார்,32வயதான இவர், கோவை ராம் நகரை சேர்ந்த ரேகா என்ற 21வயது பெண்ணை, கடந்த மூன்று வருடங்களாக காதலித்து வந்த நிலையில் இருவரும் வேறு வேறு சமூகம் என்பதால் பெண் வீட்டில், இவர்களின் காதலுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். இந்த நிலையில் இன்று, தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. மணமகன் வீட்டு உறுப்பினர்கள் பலர் முன்னிலையில், இந்து முறைப்படி, தாலி கட்டி, தனது மனைவியாக ஏற்று கொண்டார். தொடர்ந்து அனைவருக்கும் இனிப்புகள் வழங்கபட்டது. இந்த நிகழ்வில்,

வழக்கறிஞர் குமாஸ்தாக்கள் லட்சுமி,திவ்யா, கவுண்டம்பாளையம் லட்சுமி, பாலகிருஷ்ணன்,கணுவாய் ராதாகிருஷ்ணன்,

கருப்பசாமி, யோகராஜ், நித்யானந்தன், பார்த்திபன், சந்தோஷ் பாலாஜி, சோனியா, ரங்கநாதன், வைத்தியர் பாலகிருஷ்ணன், அரசு போக்குவரத்து கழக ஐஎன்டியுசி அமைப்பை சார்ந்த, ராஜேஷ், ஸ்ரீ முருகன், பால்ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோவை புரோசோன் மாலில் மே 17 ந்தேதி தி சிக்கூ எனும் அமைப்பு நடத்தும் ஆதரவற்ற நாய்,பூனைகள் உள்ளிட்ட செல்லப்பிராணிகளை தத்தெடுக்கும் நிகழ்வு




பள்ளி மாணவர்கள் ஒருங்கிணைத்தும் நடத்தும் இதில் செல்லப்பிராணிகள் பிரியர்களுக்கென பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளதாக ஒருங்கிணைப்பு குழுவினர் தெரிவித்தனர். தி.சிக்கூ புராஜக்ட் சார்பில் கோவை புரோசோன் மாலில் மே 17,அன்று செல்லப்பிராணி தத்தெடுப்பு இயக்கம் எனும்அமைப்பைஉருவாக்கி, பூனை, நாய் போன்ற செல்லப்பிராணிகளை தத்தெடுக்கும் நிகழ்ச்சியாக நடைபெற உள்ளது..

இந்நிலையில் இது தொடர்பானசெய்தியாளர்கள்சந்திப்புகோவை ஆர்.எஸ்.புரம் பகுதியில் உள்ள தனியார் ஓட்டல் அரங்கில் நடைபெற்றது..

இதில் ,சிக்கூ புராஜெக்ட் நிறுவனர்ளான அத்வைத்ராவ்,அம்ரிதா ரமேஷ் மற்றும் நினாத், நேஹா ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது..

சிக்கூ திட்டம் சார்பாகநடைபெறும்,செல்லப்பிராணி தத்தெடுப்பு இயக்கமே இந்த நிகழ்வின் முக்கிய நோக்கம், பாதுகாப்பில்லாமல் இருக்கும்தெருநாய்கள் மற்றும் பூனைகளுக்கு பாதுகாப்பான நிரந்தர வீடுகளை கண்டுபிடிப்பதே இந்த குழுவின் நோக்கம் என தெரிவித்தனர்..

குறிப்பாக செல்லப்பிராணிகளை அதிக விலை கொடுத்து வாங்குவதற்குப் பதிலாக தெருவில் சுற்றி திரியும் ஆதரவில்லாமல் இருக்கும் பிராணிகள் தத்தெடுப்பை ஊக்குவிப்பதே இதன் முக்கிய நோக்கம் என தெரிவித்தனர்..

இதில் ஆதரவற்ற செல்லப்பிராணிகளை தத்து கொடுப்பதற்கு முன்பாக முறையான மருத்துவ பரிசோதனைகள் செய்து தடுப்பூசிகள் உள்ளிட்ட பாதுகாப்பு நடைமுறைகளை கடை பிடிப்பதாக தெரிவித்தனர்..

பொதுமக்களுக்கு சமூக பங்களிப்பை அதிகரிக்கும்வகையில் விலங்குகள் நலன் குறித்து விழிப்புணர்வை இந்த நிகழ்வின் வாயிலாக ஏற்படுத்த இருப்பதாக தெரிவித்தனர்..

இதில், பல்வேறு விலங்குகள் நல அமைப்பினர் இணைந்து விலங்குகளை பாதுகாக்கவும், அன்பான குடும்பங்களுடன் இணைக்கவும் நடத்தப்படும் இந்த விழாவில், மீட்கப்பட்ட நாய்கள், பூனைகளுடன் மக்கள் சந்திப்பு, சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்,செல்லப்பிராணிகளுடன் ராம்ப் வாக் போன்ற கலை நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகள் நடைபெற உள்ளதாக அத்வைத் ராவ் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈரோடு மாவட்டம் ஆசனூர் மலை கிராமத்தில், வனத்துறை மற்றும் தனியார் அமைப்பு இணைந்து நடத்திய மாலை நேர படிப்பக குழந்தைகளுக்கான 3 நாள் கோடை முகாம் நிறைவடைந்தது. மே 12 முதல் 14 வரை நடைபெற்ற இம்முகாமில், 60 குழந்தைகளுக்கு ஓவியம், நடனம் உள்ளிட்ட பல்வேறு கலை பயிற்சிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்கள் கலந்துகொண்டு குழந்தைகளுக்கு சில்வர் வாட்டர் பாட்டில்களை வழங்கி பாராட்டினார்.



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி வட்டம் பாசூர் பேரூராட்சியின் தூய்மை பணியாளர்களுடன் தவெக நிர்வாகிகள் தவெக தலைவர் ச.ஜோசப் விஜய் தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்று கொண்டதன் வெற்றியை இனிப்பு வழங்கி கொண்டாடினார்கள். இந்த நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக் கழகத்தின் பாசூர் பேரூர் செயலாளர் மு. ஞானசேகரன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சிவகாசி பட்டாசு ஆலைகள் வெடி விபத்து சம்பந்தமாக குழு அமைக்கப்படும் இன்று வரை இது போல் யாரும் குழு அமைத்ததில்லை மதுரை விமான நிலையத்தில் அமைச்சர் கீர்த்தனா பேட்டி



தமிழகவெற்றி கழகத்தின் சார்பில் சிவகாசி சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று பின்னர் அமைச்சராக பொறுப்பேற்று முதல்முறையாகதொகுதிக்கு செல்வதற்காக இன்று சென்னையிலிருந்து விமான மூலம் மதுரை வந்த அமைச்சர் கீர்த்தனாமதுரைவிமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்தார் அப்போது அவர் கூறியதாவது:

சிவகாசியின் முதல் பெண் எம்எல்ஏ என்று சொல்கிறார்கள் அதைவிட சிறந்த எம்எல்ஏவாக பட்டம் வாங்கி அண்ணாவுக்குகொடுக்க வேண்டும் என்று தான் என்னுடைய ஆசை.

இதுவரை சிவகாசியில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் எங்கே இருக்கிறது என்று கூட தெரியாது. கடைசி ஐந்து வருடமாகஅது செயல்படவே இல்லை நாங்கள் தான் அதை திறந்தோம் 24 மணி நேரம் மக்களுக்காக அது செயல்படும்.

பதவி ஏற்பு விழாவில் சான்றிதழ் எடுத்து செல்ல மறந்தது குறித்த கேள்விக்கு:

யார் யாரோ என்னென்னமோ சொல்கிறார்கள் கையில் தான் இருந்ததுஅவங்கவெயிட் பண்ணி இருந்தால் நமக்கு கைக்கு வந்திருக்கும். மறதி என்று சொல்கிறார்கள் அதை தவிர்த்து இருக்கலாம்.

சிவகாசியில் அடிக்கடி வெடிவிபத்து ஏற்படுவது குறித்த கேள்விக்கு: இதற்காக குழு அமைக்கப்படும் என வாக்குறுதியிலே சொல்லியிருந்தேன் அதற்கான வேலைகள் நடைபெறும். கள்ளச்சாராயத்தில் உயிரிழந்தவர்களுக்கு அதிக நிதி கொடுக்கப்படுவது குறித்த கேள்விக்கு இந்த கேள்வியை கடந்த ஆட்சியில் நீங்கள் கேட்டிருக்க வேண்டும் நாங்கள் செய்யாதபோது இந்தகேள்வியைநீங்கள் கேட்கலாம். பட்டாசு தொழிலாளர்கள் பாதுகாப்பு சம்பந்தமாக குழு அமைக்க உள்ளம் இன்று வரை இதுபோல் யாரும் அமைக்கவில்லை. கடந்த வெடி விபத்தில் கூட பாதிக்கப்பட்டவர்களுடன் இருந்தோம் பிணவரை சென்று வெடிக்கான விபத்து குறித்து ஆராய்ந்தோம் அவர்களுக்கான நீதி குறித்து மாவட்ட ஆட்சியரிடம் கலந்து ஆலோசிப்போம்.

பூரண மதுவிலக்கு குறித்த கேள்விக்கு: மது விலக்கு குறித்து முதல் கையெழுத்திட்டவர் தலைவர்விஜய்அண்ணா முக்கியமான பாதைகளில் உள்ள மதுக்கடைகள் மூடப்பட்டுள்ளன இனிமேல் எந்த மாதிரி நடவடிக்கை இருக்கும் என உங்களுக்கே தெரியும் இதற்கான பதில் நான் சொல்ல வேண்டிய தேவையில்லை என்றார்.

## ஈரோடு மாவட்டத்தில் ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

# தனியார் பள்ளி வாகனங்களுக்கான வருடாந்திர கூட்டாய்வு பணியினை தொடங்கி வைத்து ஆய்வு மேற்கொண்டார்



ஈரோடு மாவட்டம், பவளத்தான் பாளையம், ஏஈடி பள்ளிவளாகத்தில் நேற்று (15.05.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி வட்டார போக்குவரத்து துறையின் சார்பில் தனியார் பள்ளி வாகனங்களுக்கான வருடாந்திர கூட்டாய்வு பணியினை தொடங்கிவைத்து,ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு மோட்டார் வாகன சிறப்பு விதிகளின்படி, ஒவ்வொரு ஆண்டும் பள்ளி வாகனங்களில் ஆய்வு மேற்கொள்ள குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு, பெருந்துறை, பவானி,கோபிசெட்டிபாளையம்,சத்தியமங்கலம் ஆகிய பகுதிகளைச் சார்ந்த தனியார் பள்ளி வாகனங்களில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு மற்றும் பெருந்துறை,பகுதிகளில் உள்ள தனியார் பள்ளி வாகனங்களுக்கான வருடாந்திர கூட்டாய்வு பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தொடங்கி வைத்து பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். இதில் தனியார் பள்ளிகளில் செயல்படக்கூடிய வாகனங்களின் வாகனங்களில் அரசின் விதிமுறைகளின்படி, பிளாட்பாரமம், இருக்கைகள், வேக கட்டுப்பாட்டு கருவி, அவசர கால வழி கதவு, தீயணைப்பு கருவி,படிகட்டுகள், முதலுதவி பெட்டி, முதலுதவி உபகரணங்கள், வாகனத்தில் முன், பின் பகுதிகளில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதா, மேலும், பல்வேறு பாதுகாப்பு வசதிகளுடன் இயக்கப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும், வாகனங்களின் ஆவணங்கள் மற்றும் மேற்படி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும்,இந்த ஆய்வுகளில் வாகனங்களில் புத்தகப்பை வைக்கும் தனி இடம், பள்ளியின் சின்னம் (எம்பலம்), காவல்துறை, வட்டாரபோக்குவரத்துஅலுவலர்மற்றும் பள்ளி நிர்வாகத்தின் தொலைபேசி எண்கள், படிகட்டு உயரம்,லாக்புக், ஜன்னல் கம்பிகள், ஓட்டுநர் கேபின், கதவுடன் இடதுபக்க வழி உள்ளிட்டவை குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

நேற்றைய தினம், வட்டார போக்குவரத்து அலுவலகம் சார்பில் ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு, பெருந்துறை, ஆகியபகுதிகளில் உள்ள 100 பள்ளிகளைச்சேர்ந்த 1,096 வாகனங்களுக்கு வருடாந்திர கூட்டாய்வு நடைபெற்றது. மேலும், ஒரு வாரத்திற்குள் குறைகளை நிவர்த்தி செய்து மீண்டும் ஆய்விற்குகொண்டுவர அறிவுறுத்தப்பட்டது.

மேலும், வட்டார போக்குவரத்து அலுவலகம் சார்பில் வருகின்ற 19.05.2026 அன்று கோபி பகுதிகளில் உள்ள 60 பள்ளிகளைச்சேர்ந்த 463 வாகனங்களுக்கும், 20.05.2026 அன்று பவானி பகுதிகளில் உள்ள 35 பள்ளிகளைச்சேர்ந்த 358 வாகனங்களுக்கும் வருடாந்திர கூட்டாய்வு நடைபெறவுள்ளது.

1.10.2023 முதல் பதிவு செய்யப்படும் புதிய பள்ளி வாகனங்களில் AIS 135 (All India Standard) தரத்தின் படி தீயணைப்பு கருவி உபகரணங்கள் மற்றும் தீ தடுப்பு உபகரணங்கள் வாகனத்தின் உள்பகுதியில் செயல்படக் கூடிய வகையில் பொருத்தப்பட்டுள்ளது. புதிய தரத்தின் படி பாதுகாப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்ட SML நிறுவனம் மற்றும் Force Motors நிறுவனங்களின் மாதிரி வாகனங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மான்விழி, வட்டார போக்குவரத்து அலுவலர்கள் நடராஜன் (ஈரோடு), பூங்குழலி (பெருந்துறை), மோட்டார் வாகன ஆய்வாளர்கள் தனசேகர், முத்துசாமி, நித்யா உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



# மதுராந்தகம் அருகே ஸ்ரீ வேம்புலி அம்மன் கோவில் வைகாசி திருவிழா

## பெண்கள் 108 பால்குடம் எடுத்து வழிபாடு

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த ஒரத்தூர் கிராமத்தில் எழுந்தருளி அருள் பாலிக்கும் ஸ்ரீ வேம்புலி அம்மன் கோவில் வருடாந்தாரா வைகாசி திருவிழாவை ஒட்டி பக்தர்கள் கெங்கையம்மன் ஆலயத்தில் இருந்து அளகு குத்தியும் பெண்கள் 108 பால்குடம் தலையில் சுமந்தவாறும் ஒரத்தூர் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலமாக வந்து அம்மனுக்கு பாலாபிஷேகம் செய்து தங்கள் நேற்றிகடனைசெலுத்தினர்

அதனைத் தொடர்ந்து அம்மனுக்கு தீபாராதனை காண்பிக்கப்பட்டது பக்தர்களுக்கு பிரசாதமும் அன்னதானமும் வழங்கப்பட்டது.



ஈரோடுமேற்குத்சட்டமன்றதொகுதியின்தமிழகவெற்றிக்கழகசட்டமன்றஉறுப்பினர் ஆனந்த் மோகன், பதவியேற்ற பிறகு முதல் முறையாக ஈரோட்டிற்கு வருகை தந்தார். அவருக்கு கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் மற்றும் தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். பூங்கொத்துகள்கொடுத்தும், மாலைகள்அணிவித்தும்அவரைவரவேற்றனர். மேலும், பெண்கள் அவருக்கு ஆராத்தி எடுத்து அன்பை வெளிப்படுத்தி வரவேற்றனர்.



ஈரோடு மாவட்டத்திற்கு வருகை தந்த அமைச்சர் செங்கோட்டையனுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. நேற்று முன்தினம் இரவு கோபிசெட்டிபாளையம் குள்ளம்பாளையத்தில் உள்ள தனது இல்லத்தில், மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் உயர் அரசு அதிகாரிகளுடன் அமைச்சர் செங்கோட்டையன் ஆலோசனைநடத்தினார். அரசின் முக்கிய திட்டங்கள் மற்றும் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

# அடுத்த ஆண்டு முதல் நீட் தேர்வு கணினி வழியில் நடத்தப்படும்: மத்திய அரசு அறிவிப்பு



மருத்துவப் படிப்புக்கான NEET நுழைவுத் தேர்வு வினாத்தாள் கசிந்ததாக வெளியான தகவலை அடுத்து கடந்த 3-ம் தேதி நடத்தப்பட்ட அத்தேர்வு ரத்து செய்யப்பட்டது. இதற்கான அறிவிப்பை தேசிய தேர்வு முகமை (NTA) அறிவித்தது. இதையடுத்து, மறு தேர்வு ஜூன் 21ல் நடத்தப்படும் என்றும் தேசிய தேர்வு முகமை (வெள்ளிக்கிழமை) அறிவித்துள்ளது.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான், "NEET-UG தேர்வுக்கான புதியதேதியைNTAஅறிவித்துள்ளது. இந்த மறுதேர்வு ஜூன் 21-ம் தேதி நடைபெறும். மாணவர்களும் அவர்களின் எதிர்காலமுமே எங்களின் மிக உயர்ந்த முன்னுரிமையாகும். மாணவர்களின்கடினஉழைப்பு மற்றும் முயற்சிகளின் மீது அரசாங்கம் எப்போதும் மிகுந்த அக்கறையுடனும் உணர்வுப்பூர்வமாகவும் இருந்து வருகிறது. நீட் தேர்வு மே 3ம் தேதி நடத்தப்பட்டது. மே 7ம் தேதிக்குள் 'ஊகத் தாள்கள்' (guess papers) என்று கூறப்படுபவற்றில் இடம்பெற்றிருந்த சில கேள்விகள், இந்த ஆண்டின் கேள்வித்தாளிலும் இடம்பெற்றிருந்ததாக NTA-வின் குறைதீர்க்கும் அமைப்பு வாயிலாகப் புகார்கள் பெறப்பட்டன. உடனடியாகஇது குறித்து ஆலோசனைகள் நடத்தப்பட்டன. NTA மற்றும் அரசாங்கம் ஆகியவை உயர்கல்வித்துறையுடன் இணைந்து ஒரு முதற்கட்ட விசாரணையைத் தொடங்கின. பின்னர் இந்த விவகாரம் இந்திய அரசாங்கத்தின் தொடர்புடைய விசாரணை முகமைகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேலோட்டமாகப் பார்க்கையில் இவ்விவகாரம் இரண்டு அல்லது மூன்று மாநிலங்களுடன் தொடர்புடையதாகத் தோன்றியது. எனவே, அந்தந்த மாநிலங்களின் விசாரணை முகமைகளுடன் ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்த விசாரணை செயல்முறைமே7அன்று இரவு முதல் முழுவீச்சில் தொடங்கியது. மே 8 முதல் தொடர்ந்து நடைபெற்றது. நான்கு நாட்களுக்குள், 'ஊகத் தாள்கள்' என்ற போர்வையில் கேள்விகள் கசிந்துள்ளன என்பது குறித்த தெளிவு எங்களுக்குக் கிடைத்ததும், அது உறுதியானதும், மாணவர்களின் நலன் கருதி மே 12 அன்று நாங்கள் உரிய நடவடிக்கையை மேற்கொண்டோம்.

கல்வித்துறையில் செயல்படும் மாஃபியா கும்பல்களின் சதியினாலோ அல்லது தகுதியற்றஒருநபர்முறையற்ற வழிகள் மூலம் பயனடைவதாலோ தகுதியுள்ள எந்தவொரு மாணவரும்தங்கள் உரிமைகளை இழந்துவிடக்கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருந்தோம். தற்போது மறு தேர்வு தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. முறைகேடுகள் விஷயத்தில்பூஜ்ஜிய சகிப்புத்தன்மை கடைப்பிடிக்கப்படும். தேர்வு மாஃபியாக்கள் மற்றும் சமூக விரோத சக்திகளுக்கு எதிரான ஒரு நீண்ட போராட்டமாக இது அமையும். இந்த தொழில்நுட்ப காலத்தில் புதிய சவால்கள் உருவாகி வருகின்றன. பல்வேறு சமூக ஊடகக் கணக்குகள் மூலம் தவறானதகவல்கள் பரப்பப்பட்டு குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மறுதேர்வு நடைமுறையை சீர்குலைப்பதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

# Indian rupee hits alltime low, slips past 96 per dollar amid oil price surge



The Indian rupee weakened to an all-time low on Friday, as oil prices neared $110 per barrel, intensifying economic challenges for the world's third-biggest crude importer, with strains emerging in key indicators.

The rupee fell 0.4% to 96.1350 per US dollar, eclipsing its previous all-time low of 95.9575 hit in the previous session.

The rupee ended the session at 95.9650, down 1.5% week-on-week.

The currency has declined over 6% year-to-date and is Asia's worst-performing unit, battered by persistent capital outflows and worries over the balance of payments strain as the Iran war keeps energy prices on the boil.

Brent crude futures rose over 3% to $109 per barrel on Friday, heightening worries over global inflation and sending bond yields higher on rising expectations of interest rate hikes this year.

"The longer the conflict dragged on, the more the effects would manifest in the form of higher inflation, weaker economic growth, and a deterioration in external balances especially for large net energy importers," Khoon Goh, head of Asia Research at ANZ, said in a note.

"Central banks in the region might be forced to tighten policy in response to the inflation shock as well as to stabilise exchange rates," the note said.

Asian currencies were down between 0.3% and 0.8%, while regional stocks slumped more than 2%.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.